**3.2.2015**

தினமணி

### இன்றைய வேளாண் செய்திகள்

## தேசிய வேளாண், வாழை உற்பத்தி நிறுவனங்களுக்கு இடையே பாரம்பரிய ரகங்கள் தொடர்பாக ஒப்பந்தம்

தேசிய வேளாண் நிறுவனத்துக்கும், தமிழ்நாடு வாழை உற்பத்தி நிறுவனத்துக்கும் இடையே வாழை மர பாரம்பரிய ரகங்கள் தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தேசிய வேளாண் நிறுவனத்தின் நிறுவனரும், மத்திய முன்னாள் அமைச்சருமான சி.சுப்பிரமணியத்தின் 105-வது பிறந்த நாள் விழா சித்தாமூர் ஒன்றியத்துக்குள்பட்ட இல்லீடு கிராமத்தில் இயங்கி வரும் நிறுவன அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில், மேற்கண்ட ஒப்பந்தம் கையெழுத்தானது. விழாவுக்கு தேசிய கிராமப்புற வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.வி.ராவ் தலைமை தாங்கினார். செயலாக்க இயக்குநர் எம்.ஆர்.ராமசுப்பிரமணியன் வரவேற்றார். நிலையான பயிர் உற்பத்தி மேம்பட தொழில்நுட்பத் திட்டத்தை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத் துணைவேந்தர் கே.ராமசாமி தொடக்கிவைத்தார். தேசிய வேளாண் நிறுவனத்தின் இயக்குநர் எம்.வி.முருகன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## நம்பியூர் வட்டாரத்தில் வேளாண்மைத் திட்டப் பணிகள் ஆய்வு

நம்பியூர் வட்டாரத்தில் வேளாண்மைத் திட்டப் பணிகள் குறித்து அதிகாரிகள் திங்கள்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். கோபி அருகே, நம்பியூர் வட்டாரத்தில் வேளாண்மைத் திட்டப் பணிகளையும், அசோலா உயிர் உர உற்பத்தியையும் ஈரோடு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எம்.செல்வராஜு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி, வேளாண்மை துணை இயக்குநர் கார்த்திகேயன்,

வேளாண்மை அலுவலர் பிரியா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் மோகனசுந்தரம் ஆகியோர் உடனிருந்தனர். செயல் விளக்க ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மணிகண்டன், அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர். 17 சதவீதம் வரையிலான ஈரப்பதம் கொண்ட நெல் 720 டன் கொள்முதல் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் காரீப் பருவ சாகுபடி செய்த நெல்லில் 17 சதவீதம் வரையிலான ஈரப்பதம் கொண்ட சுமார் 720 டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக புதுக்கோட்டை மண்டலம் மூலம் கறம்பக்குடி வட்டத்தில் வெள்ளாளவிடுதி, மழையூர், ராங்கியன்விடுதி, கலியராயன்விடுதி, காட்டாத்தி, ஆலங்குடி வட்டத்தில் ஆலங்குடி, எல்.என். புரம், நெடுவாசல், வல்லத்திராக் கோட்டை, அறந்தாங்கி வட்டத்தில் மங்களநாடு, சுப்ரமணியபுரம், மேற்பனைக் காடு, அமரசிம்மேந்திரபுரம், வல்லவாரி, துரையரசபுரம், நாகுடி, கண்டிச்சாங்காடு, திருவப்பாடி, வாரிவயல், ஆவுடையார்கோவில் வட்டத்தில் திருப்புனவாசல், தீயத்தூர், பொன்பேத்தி, அமரடக்கி, மீமிசல், மணமேல்குடி வட்டத்தில் நிலையூர், சிங்கவனம், கானாடு, சாய்குடி, கந்தர்வகோட்டை வட்டத்தில் புதுப்பட்டி (மட்டாங்கால்), குளத்துநாயக்கன்பட்டி, குளத்தூர் வட்டத்தில் கீரனூர் உள்பட 31 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 29.01.2015-ம் தேதி வரை 720 மெட்ரிக். டன் நெல் விவசாயி களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், தேவைக்கேற்ப கொள்முதல் நிலையங்கள் திறந்து செயல்படுத்தப்படவுள்ளது. சன்னரக நெல் ஊக்கத் தொகையுடன் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1470 வீதமும், பொது நெல் ஊக்கத் தொகையுடன் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1410 வீதமும், 17 சதவீத ஈரப்பதம் வரையிலான நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**26 டன் சின்ன வெங்காயம் ரூ. 4 லட்சத்துக்கு ஏலம்**

செட்டிக்குளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திறந்த முறை ஏலத்தில் 26 டன் சின்ன வெங்காயம் ரூ. 4 லட்சத்திற்கு விற்பனையானது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் குரும்பலூர், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், சத்திரமனை, பொம்மனப்பாடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 91 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். இதில் ஈரோடு, தென்காசி, திண்டுக்கல், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், சத்திரமனை, பொம்மனப்பாடி, தேனூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 12 வியாபாரிகள் 350 மூட்டை (26,143 கிலோ) சின்ன வெங்காயத்தை அதிகபட்சமாக 1 கிலோ ரூ. 30.50க்கும், விதை வெங்காயம் ரூ. 36க்கும், சராசரியாக ரூ. 15க்கும் ஏலத்தில் எடுத்தனர். இதன்மூலம், 26 டன் சின்ன வெங்காயம் ரூ. 3,99,385க்கு விற்பனையானது.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும் வைக்கோல் விற்பனை**

நிலக்கோட்டை : நிலக்கோட்டை தாலுகாவில் உள்ள அணைப்பட்டி, விளாம்பட்டி, பள்ளபட்டி, சிலுக்குவார்பட்டி, மட்டப்பாறை, சிறுநாயக்கன்பட்டி, மைக்கேல் பாளையம், ராமராஜபுரம் பகுதி விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த ஆண்டு ஓரளவு பெய்த மழையால் விளைந்த நெல்லுக்கு சரியான விலை கிடைக்காததால், சோகத்தில் இருந்த விவசாயிகளுக்கு தற்போது வைக்கோல் விற்பனை சந்தோசத்தை அளித்துள்ளது.

வறட்சி நேரத்தில் விவசாயிகள், ஆடு, மாடு, கோழிகள் வளர்த்து வருமானம் பார்த்தனர். இந்த ஆண்டு ஓரளவு பெய்த மழையால் ஆறு மற்றும் கிணற்று நீரை வைத்து நெல் விளைவித்தனர். தற்போது அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. நெல்லுக்கு திருப்தியான விலை கிடைக்காத நிலையில், விவசாயிகள் வைக்கோலை சேமித்து வைப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர். ஏனெனில் வைக்கோலுக்கு உள்ளூர் மட்டுமின்றி, பக்கத்து நகரங்களிலும், வெளிமாவட்டங்களிலும் கடும் கிராக்கி உள்ளது. ஒரு டிராக்டர் வைக்கோலின் விலை ரூ.1,500 முதல் ரூ.2,500 வரை உள்ளது. இதனால் தற்போது நிலக்கோட்டை பகுதியில் வைக்கோல் அமோகமாக விற்பனையாகிறது. அணைப்பட்டிவிவசாயி சுரேஷ் கூறுகையில்,"கடந்த ஆண்டுகளில் வறட்சியினால் விவசாயிகளின் கால்நடைகளுக்கே தீவனம் தட்டுப்பாடு இருந்தது. ஆனால் இந்த ஆண்டு வெளிமாவட்ட விவசாயிகளுக்கும் வைக்கோலை விற்கும் அளவிற்கு வைக்கோல் தட்டுப்பாடின்றி உள்ளது," என்றார்.

**<u>கால்நடை கிளை நிலையம் திறப்பு</u>**

வாலாஜாபாத்: உள்ளாவூர் கால்நடை கிளை நிலையத்தை, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் நேற்று திறந்து வைத்தார். உள்ளாவூர் கிராமத்தில், நேற்று காலை 8:30 மணி அளவில் நடந்த, கால்நடை கிளை நிலையம் திறப்பு விழாவிற்கு, கால்நடை துறை இணை இயக்குனர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். உத்திரமேரூர் சட்டசபை உறுப்பினர் கணேசன் முன்னிலை வகித்தார். காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் சண்முகம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கால்நடை கிளை நிலையத்தை திறந்து வைத்தார். உள்ளாட்சி நிர்வாகிகள் மற்றும் கால்நடை துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். மாவட்ட கவுன்சிலர் பிரபாகரன் வரவேற்றார். ஊராட்சி தலைவர் லோகநாதன் நன்றி கூறினார்.

## ரூ.61 லட்சம் மதிப்பில்வேளாண் பொருள் ஏலம்

அந்தியூர்:அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்துக்கு, நேற்று, தேங்காய், எள், நிலக்கடலை, மக்காச்சோளம், பாசிப்பயிறு, துவரை, நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகியவை அதிகமாக வரத்தானது.இதில், 12 ஆயிரம் தேங்காய், குறைந்த விலையாக, 4.50 ரூபாய்க்கும், அதிகப்பட்சமாக, 17 ரூபாய் என, 1.2 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 100 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 51.18 முதல், 96.29 ரூபாய் வரை, 2.5 லட்சம் ரூபாய்க்கும், வெள்ளை ரக எள், 30 மூட்டைகள் கிலோ, 78.29 முதல், 92.19 ரூபாய் என, 1.5 லட்சம் ரூபாய்க்கும் ஏலம் போனது. மக்காச்சோளம், 200 மூட்டைகள் கிலோ, 10.78 முதல், 11.29 ரூபாய் வரை, 2 லட்சம் ரூபாய்க்கும், புதன்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்துக்கு, 100 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. காய்ந்தது, 40 முதல், 43.19 ரூபாய் வரை, 1.2 லட்சம் ரூபாய்க்கும், ஆமணக்கு, 3 மூட்டை கிலோ, 36.59 முதல், 41.59 ரூபாய் வரை, 10 ஆயிரம் ரூபாய்க்கும், பாசிப்பயிறு, 36 மூட்டைகள், 76.19 முதல், 89.89 ரூபாய் வரை, 1.5 லட்சத்துக்கும், துவரை, 800 மூட்டைகள் குறைந்தபட்ச விலையாக, 48.66 ரூபாய்க்கும் அதிகப்பட்ச விலையாக, 53.69 ரூபாய்க்கும் விற்பனையாகி, 35 லட்சம் ரூபாய்க்கும் ஏலம் போனது.கடந்த, வியாழக்கிழமை நடந்த பருத்தி ஏலத்துக்கு "பிடி' ரக பருத்தி, 1,000 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு, குறைந்த பட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு, 33.50 முதல், 37 ரூபாய் வரை, 12 லட்சம் ரூபாய் என, மொத்தம், 61 லட்சம் ரூபாய்க்கு வேளாண் பொருட்கள் வர்த்தகம் நடந்தது. இத்தகவலை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

## முயல் வளர்ப்புக்கு ஒரு நாள் பயிற்சி

வேலாயுதம்பாளையம்:கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் கடந்த, 30ம் தேதி முயல் மற்றும் பன்றி வளர்ப்பு பற்றிய பயிற்சி நடந்தது.பயிற்சியில், முயல் மற்றும் வெண்பன்றி வளர்ப்பிலுள்ள அறிவியல் ரீதியான பராமரிப்பு முறைகள், வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, தாக்கும் நோய்கள் அவற்றை தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள் மற்றும் பண்ணைப் பொருளாதாரம் ஆகிய தலைப்புகளில் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சியில், 20 பயனாளிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.பயிற்சி மையத்தின் பேராசிரியர்களான அகிலா மற்றும் மருத்துவர் பாரதி ஆகியோர் பயிற்சியளித்தனர்.

## ஏலக்காய் உற்பத்தியாளர்கள் கம்பெனி துவக்க விழா

போடி : இடுக்கி மாவட்ட பாரம்பரிய ஏலக்காய் உற்பத்தியாளர்கள் கம்பெனி துவக்க விழா போடியில் நடந்தது. கம்பம் பகுதியை சேர்ந்த ஏல விவசாயிகள் 200 பேர்கள் இணைந்து இடுக்கி மாவட்ட பாரம்பரிய ஏலக்காய் உற்பத்தியாளர்கள் கம்பெனி என்ற நிறுவனத்தை துவக்கியுள்ளனர். போடியில் நடந்த துவக்கவிழாவில் பாங்க் ஆப் இந்தியாவின் கோவை மண்டல மேலாளர் ராஜாராமன், ஓய்வு பெற்ற ஏ.டி.ஜி.பி., பாலசந்தர், முன்னோடி ஏல விவசாயிகள் தர்வேஷ்முகைதீன், மாத்யூ, வியாபாரிகள் சங்க தலைவர் முருகேசன் குத்துவிளக்கேற்றினர். ஏலத்தில் 31 ஆயிரத்து 419 கிலோ விற்பனைக்கு வைக்கப்பட்டது. அதிகபட்ச விலையாக கிலோ ரூ.1262, சராசரியாக ரூ. 962 ம் விலை கிடைத்தது. ஏல நிறுவன நிர்வாகிகள் கூறியதாவது: தற்போது வண்டன்மேடு, ஆனவிலாசம், சக்குபள்ளம், நரியம்பாறையில் ஏலக்காய் பதிவு நடக்கிறது. விரைவில் பூப்பாறை, ராஜகுமாரி, பாரத்தோடு ஆகிய இடங்களில் பதிவு மையங்கள் துவக்கப்படும். அனைத்து சனி, ஞாயிறுகளிலும் பதிவு

நடைபெறும். ஒவ்வொரு திங்கள் கிழமையும் பகல் 2.15 மணியளவில் போடியில் "இ ஆக்ஷன்' நடைபெறும். ஏல விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் ஏல விவசாயிகள் ஒருங்கிணைந்து இந்த நிறுவனத்தை துவக்கியுள்ளோம், என்றனர்.

## 9,840 பருத்தி மூட்டைரூ.1.32 கோடிக்கு ஏலம்

ராசிபுரம்:ராசிபுரத்தில் நடந்த ஏலத்தில், 9,840 மூட்டை பருத்தி, 1.32 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) சார்பில், கவுண்டம்பாளையம் குடோனில், நேற்று பருத்தி ஏலம் நடந்தது. 35க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பங்கேற்றனர். ரகசிய டெண்டர் முறையில் ஏலம் நடந்தது.சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, தொப்பப்பட்டி, வடுகம் முனியப்பம்பாளையம், புதுப்பட்டி, சந்திரசேகரபுரம், குருசாமிபாளையம், கல்யாணி, அம்மாபாளையம், மலையாம்பட்டி, வேலம்பாளையம், பூசாரிபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் அறுவடை செய்த பருத்திகளை ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.அதில், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, திருப்பூர், சேலம், ஆத்தூர், கொங்ணாபுரம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று போட்டி போட்டி ஏலம் எடுத்தனர்.நேற்று நடந்த ஏலத்தில், 9,840 மூட்டைகள் குவிக்கப்பட்டது. அதில், டி.சி.ஹெச்., ரகம், அதிக பட்சம், 4,669க்கும், குறைந்த பட்சம், 3,859 ரூபாய்க்கும் ஏலம் போனது. ஆர்.சி.ஹெச்., ரகம், அதிக பட்சம், 4,050க்கும், குறைந்த பட்சம், 3,436 ரூபாய்க்கும் விற்பனையானது. ஒரே நாளில், 1.32 கோடி ரூபாய்க்கு பருத்து ஏலம் போனது. லட்சத்திற்கு ஏலம் போனது.

தினகரன்

## இன்றைய வேளாண்செய்திகள்

### <u>தர்பூசணி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்</u>

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் கோடை காலங்களில் விவசாயிகள் அதிகளவில் தர்பூசணி சாகுபடி செய்வது வழக்கம். மணிலா சாகுபடி செய்த விளை நிலங்களில் ஊடு பயிராக தர்பூசணி பயிரிட்டுள்ளனர். தர்பூசணி சாகுபடிக்கு மணல் பாங்கான நல்ல வடிகால் வசதி உள்ள மண் ஏற்றதாக இருக்கும். நன்றாக உழுது களைகள் அகற்றப்பட்ட நிலப்பரப்பில் நாற்று நடவு செய்ய வேண்டும். விதைகளை ஊன்று வதை விட குழிதட்டு முறையில் நாற்றுகளை உற்பத்தி செய்து நடவு செய்வது மிக சிறப்பான பலனை தரும். ஒரு ஹெக்டேருக்கு 400 கிராம் முதல் ஒரு கிலோ வரை விதை தேவைப்படுகிறது. நடவு செய்த பயிர்களுக்கு 3 நாட்களுக்கு ஒரு முறை தழை, மணி, சாம்பல் சத்துகள் என ஒரு ஹெக்டேருக்கு 25 கிலோ என்ற அளவில் இட வேண்டும்.களைகளை நீக்கினால் விரைவில் செடி வளரும். நடவு செய்த 65 நாட்களில் தர்பூசணி பழங்கள் அறுவடை செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு 40 முதல் 60 டன் வரை தர்பூசணி அறுவடை செய்யப்படுகிறது. கோடை காலங்களில் அதிக அளவு விரும்பி உண்ணப்படுவதால் இந்த பகுதியில் தர்பூசணி சாகுபடிதீவிரமடைந்துள்ளது.

### <u>மா மரத்துக்கு உரமிடும் பணி தீவிரம்</u>

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் திருநாவலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் தோட்டக்கலைத்துறை சார்பில் மா மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகிறது. இதில் கூடுதல் மகசூல் பெறுவதற்கு உரமிடும் பணிகள் அ.குரும்பூர் உள்ளிட்ட கிராமங்களில் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இது குறித்து தோட்டக்கலை துறை அலுவலர் அலைக்சாண்டர் கூறும்போது: மா

மரத்தில் தத்துப்பூச்சிகள் மற்றும் பூங்கொத்து புழுக்கள் பூங்கொத்துகளில் அமர்ந்து சாறை உறிஞ்சி குடிப்பதால் பூக்கள் பிஞ்சுகள் பிடிக்காமல் உதிர்ந்து விடும் இதை கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு பாசோலான் மருந்து, 1.5 மில்லி ஒரு லிட்டர் நீரில் கலந்து மரத்தின் இலைகள், தண்டுகள், கிளைகளில் நன்கு நனையும் படி தெளிக்க வேண்டும். பூக்க ஆரம்பிக்கும் காலத்திலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும். மேலும் என்ஏஏ என்ற வளர்ச்சி ஊக்கி மருந்தை 20 பிபிஎம் என்ற அளவில் 2 முறை தெளிப்பதால் பூ மற்றும் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு காய்பிடிப்பு அதிகரிக்கும் என கூறினார். மா பயிரிட்டுள்ள விவசாயிகள் இந்த முறையினை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெறுவதற்கு தோட்டக்கலை துறை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பயனடையலாம், என்றார். உதவி அலுவலர் ஜோதி ராமலிங்கம் உள்ளிட்ட அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**<u>திருச்சி திருச்செந்துறையில் நாளை வாழைத்தார் பொது ஏலம்</u>**

திருச்சி, : திருச்செந் துறை வணிக வளாகத்தில் நாளை வாழைத்தார் பொது ஏலம் நடை பெறுகிறது. திருச்சி வேளாண் விற் பனை மற்றும் வணிகத் துறை சார்பில் ஸ்ரீரங்கம் தாலுகா திருச்செந்துறை யில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் நாளை செவ்வாய்கிழமை நடைபெறுகிறது.இந்த பொது ஏலத் தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷனுமின்றி அவர்களுக்கு உடனுக்கு டன் பணமும் பட்டு வாடா செய்யப்படுகிறது. இங்கு வாழைத்தார் கொண்டு வரும் விவசாயி கள் அன்று காலை 11 மணிக்குள் முன் பதிவு செய்ய வேண்டும். திருச்சி மாவட்டம் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் வட்டாரங் களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழைவணிக வளாகத் துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் பங்கேற்கு மாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## பண்ணையாளர்களுக்கு கறவைமாடு வளர்ப்பு பயிற்சி

கரூர், : கரூர் அருகே பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மையம் சார்பில் பண்ணையாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் அருணா துவக்கி வைத்தார். ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் அகிலா தலைமை வகித்தார். நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் பார்த்திபன் முன்னிலை வகித்தார். மைய உதவி பேராசிரியர் பாரதி வரவேற்றார். கறவை மாடு வளர்ப்பு முறை, கலப்பு பசுந்தீவன உற்பத்தி, பண்ணை கழிவுகளின் மறுசுழற்சி குறித்த பட்டறிவு பயணத்துடன் கூடிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன. தேர்வு செய்யப்பட்ட 300 பண்ணையாளர்கள் இதில் கலந்து கொண்டனர். நபார்டு வங்கி மேலாளர் முருகேசன், அறிவியல் மையதிட்ட இயக்குனர் திரவியம், ஆவின்மேலாளர் வேலுசாமி மற்றும் பலர் கலந்துகொண்டனர். கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமிநன்றிகூறினார்.

## உளுந்து, கடலை சாகுபடியை அதிகளவில் பெருக்க வேண்டும் வேளாண் துறை வலியுறுத்தல்

திருமயம், : திருமயம் வட்டார விவசாயிகளுக்கு குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமைத் துவக்கிவைத்து வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் பேசுகையில், குறைந்த அளவில் உள்ள தண்ணீரை கொண்டு உளுந்து, கடலை போன்றவற்றை அதிக அளவில் சாகுபடி செய்து குறைவான நாட்களில் கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொண்டார். மேலும் பண்ணை குழு உறுப்பினர்கள் தொழில்நுட்பங்களை தெரிந்துகொண்டு தங்கள் பகுதியில் உள்ள மற்ற மகளிர் விவசாயிகளுக்கும் தெரிவிக்க வேண்டும் என்றார். உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி பேசுகையில் பயிற்சியில் வழங்கப்படும் தொழில்நுட்ப கருத்துக்களை விவசாயிகள் தவறாமல் கடைப்பிடித்து கூடுதல் மகசூல் பெறுவதோடு பிற விவசாயிகளுக்கும் தெரிவிக்க வேண்டும் என்றார். வேளாண் அலுவலர் ராஜசேகரன், உளுந்து மற்றும்

நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள், ரகங்கள் தேர்வு, விதை நேர்த்தி முறை, உர நிர்வாகம், களை நிர்வாகம், பயிர் பாதுகாப்பு முறை ஆகியன குறித்து விளக்கிப் பேசினார். மேலும், வேளாண் துறை அலுவலர் ராமமூர்த்தி ஜெகதீஸ்வரி உள்ளிட்ட பலர் வாழ்த்திப் பேசினர்.

## கறவைமாடு வளர்ப்போருக்கு தீவன மேலாண்மை பயிற்சி

பாபநாசம், : பாபநாசம் விவேகானந்தா சமூக கல்வி சங்கத்தின் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு மையத்தின் சார்பில் அய்யம்பேட்டை அடுத்த பட்டுக்குடி கிராமத்தில் பசுமை உழவர் மன்றத்தில் கறவைமாடு வளர்ப்போருக்கு மாட்டுத் தீவன மேலாண்மைப் பயிற்சி நடைபெற்றது. பயிற்சி அளித்த வேல்முருகன், கறவை மாடுகளுக்கு உயர் ரக புல், கோயம்புத்தூர் - 3, கோயம்புத்தூர் - 4 பசும் புல் வளர்ப்பது குறித்தும், ஒரு மாட்டுக்கு நாள் ஒன்றுக்கு 20 கிலோ கொடுப்பதால் ஏற்படும் பயன்கள் பற்றியும் எடுத்துரைத்தார். அசோலாவை பச்சையாகவோ, பதப்படுத்தியோ மாட்டுத் தீவனமாக பயன்படுத்தலாம். அசோலாவில் புரதச்சத்து, கொழுப்புச்சத்து நிறைய உள்ளது. அசோலாவை கோதுமை, தவிடுடன் சேர்த்து அளிக்கும்போது கால்நடை விரும்பி உட்கொள்வதுடன் 15 நாட்களுக்குப் பிறகு பாலின் அளவு, தரம் உயரும், நோய்கள் எதிர்ப்புச் சக்தியும் உருவாகிறது என்று விளக்கிக் கூறினார். பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## தரமான நெல் விதை உற்பத்தி செய்வது எப்படி? வேளாண் அதிகாரி விளக்கம்

நாகர்கோவில், : கன்னியாகுமரி விதை சான்று உதவி இயக்குநர் குணபாலன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: நெல் வயல்களில் கலவன் இருக்கும்போது பயிர்கள் ஒரே சீரான உயரம் இல்லாமல் படிக்கட்டுகள் போல மேலும் கீழுமாய் தோன்றும். சில பயிர்கள் மிகவும் சீக்கிரமாகவே பூக்கும். வேறு சில பயிர்கள் மிகவும் காலதாமதமாக பூக்கும். இதனால் உற்பத்தி செய்யும் நெல் ரகத்தின் இனத்தூய்மை வெகுவாக பாதிக்கப்பட்டு அந்த வயல் விதை உற்பத்திக்கே தகுதியற்றதாக ஆகி விடுகிறது. மேலும் ஒரு சில களைகள் வளர்ந்து அறுவடையின்போது நெல்விதைகளுடன் கலந்து விடுகிறது. நெல் விதை உற்பத்தி

வயலில் தோன்றும் சிவப்பு நெல்லின் விதையும் இவ்வாறே கலந்துவிடும் ஒரு விதையே ஆகும். இதனால் விதையின் சுத்தத்தன்மை மிகவும் பாதிக்கப்பட்டு விதை தரம் குறைந்து விடுகிறது. இதனை போன்று சில பூஞ்சாணங்கள் விதைகளை தாக்குவதால் விதையின் தரம் வயல் வெளியிலேயே குறைந்து விட ஏதுவாகிறது. விதைக் காக நடவு செய்யப்பட்ட வயல்களில் அந்த குறிப்பிட்ட நெல் ரகத்தின் குணாதிசயங்களில் இருந்து மாறுபட்டு தெரிகின்ற எல்லா பயிர்களையும், களைகள் மற்றும் நோய்வாய்ப்பட்ட பயிர்களையும் தக்க தருணத்தில் அதாவது அவைகள் பூக்கும் தருணத்தின் முன் னரே நீக்கிவிட வேண்டும். இதன் மூலம் இனக்கலப்பில்லாத சுத்தமான நல்ல விதைகளை உற்பத்தி செய்ய லாம். பயிர்கள் பூக்கும் முன்னர் அதிக உயரம் மற்றும் மிகவும் குட்டையான செடிகள், மிகவும் சீக்கிரமாக பூக்கும் செடிகளை நீக்க வேண்டும். பூக்கும் தருணத்தில் மிகவும் காலதாமதமாக பூக்கும் செடிகள், பொட்டு நெல் போன்றவற்றை நீக்க வேண்டும். அறுவடையின்போது விதைப்பயிர் மணியின் பருமனுக்கு ஒத்துப்பார்த்து நீக்கப்பட வேண்டிய சன்னம் அல்லது குண்டு நெல் விதையையும் நீக்க வேண்டும். எனவே விதை உற்பத்தி செய்யும் விவசாயிகள் விதைப்பண்ணை வயல்களில் உள்ள அனைத்து கலவன்களையும் நீக்கி தரமான விதை உற்பத்தி செய்து விளைச்சல் அதிகரித்திட வேண்டும்.இவ்வாறு செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாயிகள் நடவு செய்துள்ள நெற்பயிர்களை கலெக்டர் கணேஷ் ஆய்வு</u>**

புதுக்கோட்டை, ஆவுடையார் கோவில், மணமேல்குடியில் விவசாயிகள் நடவு செய்துள்ள நெற்பயிர் களை கலெக்டர் கணேஷ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலெக்டர்ஆய்வு

புதுக்கோட்டை மாவட் டம், ஆவுடையார்கோவில் மற்றும் மணமேல்குடி ஊராட்சி ஒன் றியங்களில் வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகள் நடவு செய்துள்ள நெற்பயிர் களை கலெக்டர் கணேஷ் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். அப்போது

அவர்கூறியதாவது:-

வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு நல்ல தரமான உயர்ரக நெல் விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கப் பட்ட நெல்விதைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ள விளைநிலங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இதில் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருப் பெருந்துறை ஊராட்சி, குளத் துக்குடியிருப்பு கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தில் எந்திரம் மூலம் அறுவடை செய்யப் படும் நெற்கதிர்கள் மற்றும் மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், மஞ்சக்குடி கிராமத்தி பயிரிடப்பட்டு, அறுவைக்கு தயார் நிலையில் உள்ள நெற்கதிர்கள் ஆகியவை பார்வையிட்டு ஆய்வு செய்யப் பட்டது.

ரூ.600மானியம்

இந்த ஆய்வின் போது விவ சாயிகள் தங்கள் நிலங்களில் கதிரடிக்கும் எந்திரம் மூலம் அறுவடை செய்வது குறித்த விவரங்களை அதற்குரிய படிவங்களில் உரிய முறையில் பூர்த்தி செய்து தங்களது பகுதிகளில் உள்ள வட்டார வேளாண்மை மையத்தில் வழங்கி அரசு வழங்கும் 1 ஏக்கருக்கு ரூ.600 மானியம் பெற விவசாயி களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய்வின் போது இணை இயக்குனர் (வேளாண்மை) ஷாஜகான், துணை இயக்குனர் (மீன்வளத் துறை) சர்மிளா, உதவி இயக்குனர் சேகர், வேளாண் உதவி இயக்குனர்கள் அடைக்கப்பன், பெரியசாமி, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## <u>விதைப்பண்ணைகளில் நெல் அறுவடை பணி</u>



விதைப்பண்ணைகளில் தற்போது நெல் அறுவடைப்பணி நடைபெற்று வருகிறது.

நெல்அறுவடைபணி

ராமநாதபுரம் மாவட்டத் தில் தரமான சான்று பெற்ற நெல் விதைகளை விவசாயி

களுக்கு வினியோகம் செய்ய ஏதுவாக வேளாண்மைத் துறை, விதைச்சான்று மற்றும் அங்கக சான்றுத்துறை ஒருங்கிணைப்புடன் விதைச்சான்று நடைமுறை களை செயல்படுத்தி நெற்பயிரில் 392 எக்டேரில் விதைப்பண்ணைகள் பல்வேறு கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விதைப்பண்ணைகள் ஐ.ஆர்–36, ஆடுதுறை–36, ஆடு துறை–39, ஆடுதுறை– 45, கோயம்புத்தூர்–50, சம்பா மசூரி, நெல்லூர் மசூரி, மேம் படுத்தப் பட்ட பொன்னி, அண்ணா 4 ஆகிய நெல் ரகங் களில் விதைப்பண்ணை கள் அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் விதைப்பண்ணைக ளில் அறுவடைப்பணிகள் நடைபெற்று வருகிறது. நெல் அறுவடைப்பணிகள் பெரும்பாலும் அறுவடை எந்திரங்கள் மூலம் நடைபெறு கிறது. விதைப்பண்ணை விவ சாயிகள் அறுவடை எந்திரங் கள் மூலம் சாகுபடி செய்யப் பட்டுள்ள விதைப் பண்ணை நெல்பயிரை அறுவடை செய் யும் போது கூடுதல் கவனத்து டன் பிற ரக விதைகள் எந்தி ரங்கள் மூலம் கலக்காத வண் ணம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரே அறுவடை எந்திரத்தினை கொண்டு பல் வேறு ரக நெல்பயிர்களை அறுவடை செய்வதால் ஒரு ரக விதைகள் மற்றொரு ரக விதைகளுடன் அறுவடை எந் திரம் மூலம் கலக்க அதிக வாய்ப்புகள் உள்ளது. விதைமாதிரி

இதனை தவிர்க்க விதைப் பண்ணைகளில் அறுவடை செய்யும்முன் அறுவடை எந் திரத்தில் உள்ள உருளையை சுத்தம் செய்ய வேண்டும். மேலும் அறுவடை செய்யும் போது முதலில் அறுவடை ஆகும் நெல்மணிகளில் குறைந்த பட்சம் ஒன்று அல்லது 2 சாக்குப்பை அளவிற்கு விதைப்பயன்பாட்டிற்கு எடுத் துக்கொள்ளாமல், அதைத் தானிய பயன்பாட்டிற்கு வைத் துக்கொள்ளுமாறு விவசாயி கள் கேட்டுக்கொள்ளப் படுகி றார்கள். மேலும் விதைப் பண்ணை விவசாயிகள் சம்பந் தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குனர்கள் மூலம் வழங் கப்பட்ட புதிய சாக்குப்பை களை மட்டும் பயன்படுத்த வேண்டும். அறுவடை செய்யப்பட்ட நெல்லில் ஈரப்பதம் 13 சதவீ தத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இதனை உறுதி செய்ய விதை மாதிரியை அருகில் உள்ள விதைச்சுத்தி நிலையத்திற்கு கொண்டு சென்று ஈரப்பதத்தை சரி பார்த்த பின்னர் விதைக்குவி யலை விதைச்சுத்தி

நிலையத் திற்கு கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார் கள். ஈரப்பதம் 13 சதவீதத்திற்கு அதிகமாக இருந்தால் தங்கள் கிராமத்தில் உள்ள களத்தில் காய வைத்து பின்னர் விதைச் சுத்தி நிலையத்திற்கு கொண்டு வரவேண்டும். இந்த தகவலை ராமநாதபுரம் விதைச்சான்று உதவி இயக்குநர் சேக் அப் துல்லா தெரிவித்தார்.

## <u>ஆலங்குளம் வட்டாரத்தில் வேளாண் துணை இயக்குனர் ஆய்வு</u>



ஆலங்குளம் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் நடவுமுறை துவரை செயல்விளக்க திடல்களை நெல்லை மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) பெருமாள் ஆய்வு மேற்கொண்டார். மேலமருதப்பபுரம் கிராமத்தில் சமுத்திரம் மற்றும் கங்கணாங்கிணறு கிராமத்தில் லட்சுமணபெருமாள், பாலசுப்பிரமணி ஆகியோரது வயல்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விவசாயிகளுக்கு நடவுமுறை துவரை சாகுபடியில் அதிக வருமானம் பெறுவதற்கு ஊடுபயிர் சாகுபடி மற்றும் செடியின் நுனியை கிள்ளி விடுவதால் அதிக கிளைகள் தோன்றி அதிக பூக்கள் பூப்பதோடு, செடிகள் உயரம் வளர்வது தடுக்கப்படுவது குறித்தும், துவரை சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. அண்ணாமலைபுதூர் கிராமத்தில் முருகையா, ஊத்துமலை கிராமத்தில் பாலசுப்பிரமணியன் ஆகியோரது வயல்களில் ஆய்வின் போது அதிக தூர்கள் வெடிக்க விசை களை கருவி கொண்டு மூன்று முறை களை எடுக்கவும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்றவும் அறிவுரை வழங்கப்பட்டது. கிடாரகுளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இயற்கை வேளாண்மையில் திருந்திய நெல் சாகுபடி இயந்திர நடவு திடல்களை பார்வையிட்டார். ஆய்வின் போது ஆலங்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் முத்து எழில், துணை வேளாண்மை அலுவலர் திவான் பக்கீர் முகதீன், விதை

சான்று அலுவலர் வேல்சாமி, உதவி வேளாண்மை அலுவலர் மாரியப்பன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## <u>7 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு கலெக்டர் சம்பத் தகவல்</u>



விழுப்புரம், விழுப்புரம் மாவட்டத் தில் வருகிற 5-ந் தேதி முதல் 7 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட உள்ளது என கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளி யிட்டுள்ள ஒரு செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

<u>நேரடிநெல்கொள்முதல்நிலையங்கள்</u>

விழுப்புரம் மாவட்டத்தில் நெற் பயிர் சாகுபடி செய்யப்பட்டு தற்போது அறுவடை நடைபெற்று வருகிறது. இந்த நெல் விற்பனை செய்வதற்கு வசதியாக தமிழக அரசு உத்தரவிட்டதன் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டத்தில் திருநாவலூர், காணை, சித்தலிங்கமடம், தீவனூர், ஆலம்பூண்டி, திருவம்பட்டு, தேவபாண்டலம் ஆகிய 7 இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வருகிற 5-ந் தேதி முதல் திறக்கப்பட உள்ளது. இந்த கொள்முதல் நிலையங்களில் சனரக நெல் மத்திய அரசின் ஆதார விலை குவிண்டால் ரூ.1,410, மாநில அரசின் ஊக்குவிப்பு தொகை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.60 என மொத்தம் ரூ.1,470, பொது ரக நெல் மத்திய அரசின் ஆதார விலை குவிண்டால் ரூ.1,350-ம், மாநில அரசின் ஊக்குவிப்புத் தொகை குவிண்டாலுக்கு ரூ.60 என மொத்தம் ரூ.1,410 என்ற விலைகளில் நேரடி நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே மாவட்டத்தில் உள்ள விவசாயிகள்இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தங்களது நெல்லை விற்பனை செய்து

பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**<u>சாத்தனூர் அணையில் இருந்து வினாடிக்கு 350 கனஅடி தண்ணீர் திறப்பு 7,500 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்</u>**



திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட விவசாய பாசனத்திற்கு சாத்தனூர் அணையில் இருந்து வினாடிக்கு 350 கன அடி தண்ணீர் நேற்று திறந்து விடப்பட்டது. இதனால் 7,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

விவசாயிகள்கோரிக்கை

தண்டராம்பட்டு அருகே சாத்தனூர் அணை அமைந் துள்ளது. இதில் இருந்து திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. சாத்தனூர் அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் விவசாய பாசனத் திற்கு தண்ணீர் திறந்து விடப் பட்டு வருகிறது. சாத்தனூர் அணையின் உயரம் 119 அடியாகும், கொள் ளளவு 7,321 கன அடியாகும்.திருவண்ணாமலை மாவட் டத்தில் கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்து போனது. இதன் காரணமாக அணை யின் நீர் மட்டம் உயரவில்லை. அணையின் தற்போதைய நீர் மட்ட உயரம் 84.35 அடியா கவும், கொள்ளளவு 1,887 கன அடி மட்டுமே உள்ளது. இந்த நிலையில் கடந்த மாதம் கலெக்டர் அலுவலகத் தில் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் பிப்ரவரி முதல் வாரத்தில் சாத்தனூர் அணை யில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

தண்ணீர்திறப்பு

இதனை ஏற்று கலெக்டர் ஞானசேகரன் நேற்று சாத்த னூர் அணையில் இருந்து விவ சாய பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடும் என்று அறிவித் தார். அதன்படி இந்த ஆண்டு விவசாய பாசனத்திற்கான தண்ணீர் சாத்தனூர் அணை யின் இடது

மற்றும் வலது புற கால்வாய்கள் மூலம் நேற்று திறந்து விடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு கலெக்டர் ஞானசேகரன் தலைமை தாங்கி, அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட்டு மலர் தூவினார். பின்னர் அவர் பேசியதாவது:– திருவண்ணாமலை மாவட் டத்தில் கடந்த சில ஆண்டுக ளாக பருவ மழை சரியாக பெய்யாத காரணத்தால் அணையின் நீர் மட்டம் உயர வில்லை. அணையின் முழு நீர் கொள்ளவு 7,321 மில்லியன் கன அடியாகும். அணையில் தற்போது 1,887 மில்லியன் கன அடி நீர் உள்ளது. மாவட்ட மக்களின் குடிநீர் திட்டம், நீர் பராமரிப்புக்கு போக அணை யில் 595 மில்லியன் கன அடிநீர் உள்ளது.

வினாடிக்கு350கனஅடி

திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட விவசாய பாசனத்திற்கு அணையின் இடது மற்றும் வலதுபுற கால் வாய் ஏரிகள் வழியாக தண் ணீர் திறந்து விடப்பட்டுள் ளது. இடதுபுற கால்வாய் மூலம் வினாடிக்கு 150 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2,899 ஏக்கர் விவசாய நிலங்களும், வலதுபுற கால் வாய் மூலம் வினாடிக்கு 200 கன அடி நீர் திறந்து விடப்பட் டுள்ளது. இதன் மூலம் 4,644 விவசாய நிலங்களும், மொத்தம் 7,543 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். சாத்தனூர் அணையில் இருந்து வினாடிக்கு 350 கன அடி வீதம் தொடர்ந்து 10 நாட்கள் அதாவது வருகிற 12–ந் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

3தவணைகளாக

திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கு வழங்க வேண்டிய 284 மில் லியன் கன அடி நீர் வருகிற ஏப்ரல் 30–ந் தேதிக்குள் அவர் கள் கேட்கும் பொழுது 3 தவ ணைகளில் தண்ணீர் திறந்து விடப்படும். சாத்தனூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் மூலம் திருவண்ணாமலை, விழுப் புரம் மாவட்டத்தில் உள்ள 7,543 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். பாசன நீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்தி கொள்ளவும். இவ்வாறு அவர் பேசி னார். நிகழ்ச்சியில் திருவண்ணா மலை உதவி கலெக்டர் உமா மகேஸ்வரி, சாத்தனூர் நீர் தேக்க திட்டகுழு தலைவர் ஜெயராமன், தண்டராம்பட்டு நிலவள வங்கி தலைவர்

தர்ம லிங்கம், தண்டராம்பட்டு ஒன்றியக்குழு தலைவர் ஜானகிராமன் மற்றும் அதி காரிகள் பலர் கலந்து கொண்ட னர். முன்னதாக பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் செல்வராஜ் வரவேற்றார். முடிவில் சாத்தனூர் அணை உதவி பொறியாளர் ரமேஷ் நன்றி கூறினார்.